தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1994 மார்ச் 19, சனிக்கிழமை

பங்குனி 5, ஸ்ரீமுக—திருவள்ளுவர் ஆண்டு—2025.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோடு
எய்த உணர்ந்து செயல்."

செயல் செய்கின்றவனது தன்மையை ஆராய்ந்து, செயலின் தன்மையையும் ஆராய்ந்து, தக்க காலத்தோடு பொருந்துமாறு உணர்ந்து எச்செயலையும் செய்திட வேண்டும்.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 41, திரு. ஆர். பி. பரமசிவம். மாண்புமிகு நிதி அமைச்சர்.

41—

உடல் ஊனமுற்றோருக்கு வாகனப்படி வழங்குதல்.

*22747—திரு. ஆர். பி. பரமசிவம்:

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியார் பள்ளிகளில் பணியாற்றும் உடல் ஊனமுற்றோருக்கு அரசு ஆணையிட்டுள்ள ரூ. 75 வாகனப்படியை வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் வழங்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) இல்லை.

(ஆ) ஏற்கனவேஅரசு உதவி பெறும் தனியார் பள்ளிகளில் பணிபுரியும் உடல் ஊனமுற்றோருக்கு 75 ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது.

திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு உதவி பெறாத பள்ளிகளில் பணியாற்றுகின்ற பணியாளர்களுக்கும்—அரசு வழங்கிடும் வாகன செலவுக்காகக் கொடுக்கப்படும் 75 ரூபாய் வழங்கிட அரசு பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்று அரசுப் பள்ளிகளாக இருக்க வேண்டும்; அல்லது அரசு பொறுப்பு ஏற்று இருக்கிற மானியம் பெறுகின்ற பள்ளிகளாவாவது இருக்க வேண்டும். தனியார் பள்ளிகள் என்று ஆரம்பித்தால், பல்வேறு கான்வென்டுகள், எல்.கே.ஜி., யு.கே.ஜி. பள்ளிகள் எல்லாமே அடங்குகின்ற தன்மைகள் வரும். ஆகவே, அந்தச் செயற் குறிப்பு அரசினிடத்தில் இல்லை.

திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிக் கட்சி சுயமரியாதை இயக்கத்தின் பரிணாம வளர்ச்சியின் திருவுருவாக இருக்கும் மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் சிந்தனையாளர்; ஆனால், செலவு செய்வதில் சிக்கனம்; எக்கணம் தேவை என்ற சீரிய கருத்துக்குச் சொந்தக்காரர். ஆகவே கருணை உள்ளம் கொண்ட நமது இதய தெய்வத்தின் ஆட்சியில் மத்திய அரசின் நடவடிக்கையால் உயர்ந்துவரும் டீசல் மற்றும் பெட்ரோல் விலையால் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பணியாற்றுகின்ற உடல் ஊனமுற்றோருக்கு அரசு வழங்கும் ரூபாய் 75-ஐ ரூபாய் 100 ஆக மாற்றி, கருணை உள்ளம் கொண்ட இந்த அரசு உதவிட ஆணை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பெரிய ஐஸ் கட்டியை வைத்து இருக்கிறார். (சிரிப்பு) ஆனால், அந்த ஐஸ் கட்டிதான் கரையுமே தவிர, நான் கரைகின்ற மாதிரி இல்லை. (சிரிப்பு) அதாவது, அரசு உதவிபெறும் பள்ளிகளில் பணியாற்றுகிறவர்கள், அரசு பள்ளிகளிலே பணியாற்றும் உடல் ஊனமுற்றவர்களுக்கு உதவிகள் உண்டு. அரசு அங்கீகாரம் பெறாமல் அல்லது உதவி பெறாமல் இருக்கிற கணக்கு எடுத்தால், அது கணக்கில் அடங்காது. ஆகவே, அவர்களுக்கெல்லாம் தருவது பொருந்தி வராது. அது பொருந்தி வராத நிலை இருக்கின்றபோது 75-ஐ நூறாக ஆக்குவதற்கு இடமே இல்லை.